

SRI LANKA
CONVENTION BUREAU

2022

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

ශ්‍රී ලංකා සම්මේලන කාර්යාංශය

இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்

Sri Lanka Convention Bureau

SRI LANKA
CONVENTION BUREAU

வருடாந்த அறிக்கை 2022

இலங்கை மாநாட்டு பணியகம்

SRI LANKA
CONVENTION BUREAU

உள்ளடக்கம்

தூரநோக்கு 05

செயற்பணி 05

குறிக்கோள்கள் 05

தாபனத் தகவல்கள் 00

தலைவரின் செய்தி 08

நிறைவேற்று சுருக்கம் 09

2022 ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகள் 10

- ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி 10
- சந்தைப்படுத்தல் 13
- சங்கங்களுடனான இணைப்பு 20
- மனித வளங்கள் மற்றும் நிருவாகம் 23
- உள்ளகக் கணக்காய்வு 23
- நிதிக் கூற்றுக்கள் - 2022 24

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 36

SRI LANKA
CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் தூரநோக்கு

“MICE சுற்றுலாவிற்கு (கூட்டங்கள், ஊக்கப் பயணம், மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள்) இலங்கையை ஆசியாவின் மிகவும் விருப்பமான இடமாக மாற்றுதல்”

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் செயற்பணி

“இலங்கை மாநாட்டுப் பணியகம், MICE சுற்றுலாவில் இருந்து அந்நிய செலாவணியில் உகந்த வருமானத்தை பெறுதல் மற்றும் இலங்கையில் “கூட்டங்கள் தொழிற்துறையை” நம்பியுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களித்தல்.

குறிக்கோள்கள்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தால் (பக்கம் எண் 32-33) கட்டளையிடப்பட்டுள்ள பணியகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

- சர்வதேச, பிராந்திய, உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றுக்கான இடமாகவும், ஊக்கமளிக்கும் பயண இடமாகவும் இலங்கையை மேம்படுத்துதல்.
- சர்வதேச, பிராந்திய, உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் ஊக்கமளிக்கும் பயண இடமாக இலங்கையின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான ஒரு கொள்கையை வகுத்தமைத்தல்.
- சர்வதேச, பிராந்திய, உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் ஒரு ஊக்கப் பயணமாக பொது மற்றும் தனியார் துறையால் ஊக்குவிப்பு, அபிவிருத்தி மற்றும் சேவைகள் என்பவற்றை ஒருங்கிணைத்து உதவுதல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் என்பவற்றை வெற்றிகரமாக நடத்துதல் மற்றும் ஊக்குவிப்பு பயணத் திட்டங்களை செயற்படுத்துவதை உறுதிசெய்தல் ஆகியவற்றின் நிமித்தம் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள மாநாடு, கண்காட்சி மற்றும் ஊக்குவிப்பு பயண ஏற்பாட்டுத் தரப்புகளுடன் ஒருங்கிணைத்து ஒத்துழைத்தல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு பயணம் என்பன போன்ற பல்வேறு அம்சங்களைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்களால் அல்லது நிறுவனங்களால் தொழில்முறை தர நியமங்கள் பேணப்படுவதை குறிப்பீடு செய்து அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- மாநாடு, கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு பயணங்கள் என்பவற்றை கையாள்வதில் ஈடுபட்டுள்ள பல நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு இடையே தொழில்முறை திறன்கள் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்துதல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள், ஊக்குவிப்புப் பயணங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்கின்ற அல்லது ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதாவது ஒரு சங்கத்துடன் அல்லது அமைப்புடன் ஏதாவது ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ள அல்லது உறுப்புரிமையை பெற வசதிசெய்தல்.
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சுற்றுலாப் பயணத் தலமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் பணியகத்திற்கு வழிகாட்டுதல்.
- நிலையான ஒரு முறையில் உபசரணைத் தொழில் உள்ளடங்கலாக போதுமான, கவர்ச்சிகரமான மற்றும் வினைத்திறனான சுற்றுலா சேவைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- பணியகத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இலங்கையில் அல்லது வேறு இடங்களில் இதுபோன்ற செயல்களையும் மற்றும் இடைநேர் அல்லது உகந்த விடயங்களையும் மேற்கொள்ளல்.

SRI LANKA
CONVENTION BUREAU

கூட்டுத்தாபனத் தகவல்கள்

இலங்கை மாநாட்டுப் பணியகம் (இமாப) உத்திரவாதத்தின் மூலமாக 1987 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது MICE சுற்றுலாவிற்கு அதாவது கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணம், மாநாடுகள் மற்றும் பெரும்கூட்டங்கள் மற்றும் காண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (பின்னர் பல சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சிகளும் கூட சேர்க்கப்பட்டுள்ளன) நிமித்தம் இலங்கையை மேம்படுத்தும் முகமாக அன்றைய சுற்றுலா அமைச்சின் கீழ் இயங்குகின்றது. நிதியிடுகை மட்டுப்பாடு காரணமாக, இந்தப் பணியகத்தின் தொழிற்பாடுகள் குறிப்பிட்டவொரு சில செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.

உத்தரவாதத்தின் மூலம் நிறுவனம் ஒழிக்கப்பட்டு கடந்த 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் ஒரு நியதிச்சட்ட சபையாக மாற்றப்பட்டது. இமாப இப்போது வருடாந்த அரசாங்க வரவுசெலவுத்திட்ட நிதியையும் சுற்றுலா அபிவிருத்தி வரியிலும் மற்றும் விமானநிலைய வரியிலும் இருந்து கிடைக்கின்ற 4% வருமானத்தையும் கொண்டு இயங்கி வருகின்றது.

பெயர் : இலங்கை மாநாட்டுப் பணியகம்

சட்ட அந்தஸ்து : 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள நியதிச்சட்டசபை

தலைமை அலுவலக முகவரி : இலக்கம் 78, காலி வீதி, கொழும்பு 03

கணக்காய்வாளர்கள் : இலங்கை கணக்காய்வாளர் நாயகம்

வங்கியாளர்கள் : இலங்கை வங்கி

முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

இல.	பெயர்	காலம்	நிறுவனம்
1	திருமதி கிமாலி பெர்னாந்து	25.02.2022 - 31.05.2022	தலைவர் - SLCB
2	திரு திசும் ஜயசூரிய	01.06.2022 - 31.12.2022	தலைவர் - SLCB
3	திரு.சுனில் திசாநாயக்க	25.02.2022 - 31.12.2022	பணிப்பாளர் நாயகம் - BMICH
4	திருமதி தம்மிகா விஜயசிங்க	25.02.2022 - 25.10.2022	பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
5	திரு. எம்.எல். கம்மன்பில	26.10.2022 - 31.12.2022	பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
6	திரு. நிஷாட் விஜேதுங்க	25.02.2022 - 31.05.2022	இலங்கை உள்ளக சுற்றுலா இயக்குநர் சங்கம்
7	திருமதி. யொலன்டா ஆன் ஹனசன்	31.05.2022 - 31.12.2022	இலங்கை உள்ளக சுற்றுலா இயக்குநர் சங்கம்
8	பேராசிரியர் ஜனிதா லியனகே	25.02.2022 - 31.05.2022	இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம்
9	பேராசிரியர் மனுஜ் வீரசிங்க	21.04.2022 - 31.12.2022	இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம்
10	செல்வி எம்.ஏ.நந்தனி	25.02.2022 - 31.12.2022	தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
11	திரு. திமுத்து தென்னகோன்	25.02.2022 - 31.05.2022	ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்

12	திரு. சமிந்த பெரேரா	17.06.2022 - 31.12.2022	ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்
13	செல்வி எம்.டி.எஸ். பிரசாதினி	25.02.2022 - 31.12.2022	சுற்றுலா அமைச்சு
14	திரு. அஜித் திசாநாயக்க	25.02.2022 - 31.05.2022	அமைச்சரின் நியமனம்
15	திரு. முகமது இம்ரான்	09.06.2022 - 31.12.2022	அமைச்சரின் நியமனம்
16	திரு. துலித பெரேரா	25.02.2022 - 31.10.2022	இலங்கை தொழில் நிபுணர் சங்கங்களின் அமைப்பு
17	திருமதி ருச்சிரா குணசேகர	17.11.2022 - 31.12.2022	இலங்கை தொழில் நிபுணர் சங்கங்களின் அமைப்பு
18	திரு. சுரேஷ் ராஜேந்திர	25.02.2022 - 31.08.2022	இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம்
19	திரு டிமிட்ரி குரே	17.11.2022 - 31.12.2022	இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம்
20	திரு. மனேஷ் பெர்னாந்து	25.02.2022 - 31.05.2022	கொழும்பு நகர சுற்றுலா விடுதிகள் சங்கம்
21	திரு. ஹெர்வ் டுபோஸ்க்	17.11.2022 - 31.12.2022	கொழும்பு நகர சுற்றுலா விடுதிகள் சங்கம்
22	திருமதி. ஷேர்லி ஜயவர்தன	25.02.2022 - 31.05.2022	இலங்கை வணிக மற்றும் கைத்தொழில் சம்மேளனம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்

திருமதி அனோமா நந்தனி	தலைவர் - AMC (2022 ஏப்ரல் - திசம்பர்)	மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திரு. சுனில் திசாநாயக்க	உறுப்பினர் (2022 ஏப்ரல் - திசம்பர்)	பணிப்பாளர் நாயகம் - BMICH
திருமதி எம்.டீ.எஸ். பிரசாதினி	உறுப்பினர் (2022 ஏப்ரல் - திசம்பர்)	சிரேஷ்ட உதவி செயலாளர் - சுற்றுலா அமைச்சு
திரு. துலித பெரேரா	உறுப்பினர் (2022 ஏப்ரல் - ஒற்றோபர்)	தலைவர் - இலங்கையின் தொழில்முறை சங்கங்களின் அமைப்பு
திருமதி டி. இம்புல்தெனிய	அவதானிப்பாளர்	அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணகாய்வு அலுவலகம்
திரு. பி. லூரேந்தரன்	அவதானிப்பாளர்	பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சுற்றுலா அமைச்சு

SRI LANKA
CONVENTION BUREAU

தலைவரின் செய்தி

இலங்கை மாநாட்டுப் பணியகம் (இமாப) இலங்கையை MICE சுற்றுலாவுக்கான ஒரு ஸ்தலமாக மேம்படுத்தும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டது. வணிக உலகின் பரிணாம வளர்ச்சியையடுத்து, நிறுவனங்கள் அவற்றின் கூட்டங்கள், ஊக்குவிப்பு சந்திப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை நடத்துவதற்கு பயனுள்ள துல்லியமான இடங்களைத் தொடர்ந்து தேடுகின்றன.

உலகளாவிய சந்திப்புத் துறையின் அளவானது, 2019 ஆம் ஆண்டு சுமார் 920 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இந்த சந்தை, 2020 ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்தது. எனினும், அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது 2030 ஆம் ஆண்டில் சுமார் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (Statista 2022).

MICE சந்தை அபரிமிதமான ஆற்றலைக் கொண்டுள்ளது. எனவே இலங்கை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பருவகாலம் என்று பாராமல், இந்த வகை சுற்றுலாவிற்கு நிறைய வழங்கக்கூடிய அற்புதமான வளங்கள் எமது நாட்டில் உள்ளன. இலங்கை குளிர்காலம் என்றில்லாமல் அனைத்து பருவகாலங்களையும் உள்ளடக்கிய சிறந்த ஒரு ஸ்தலமாகும்.

பல உள்நாட்டு சவால்களுக்கும் மற்றும் உலகளாவிய சவால்களுக்கும் மத்தியிலும், இமாப 2022 ஆம் ஆண்டில் பல சர்வதேச விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டது. MICE சுற்றுலாவின் முக்கியத்துவத்தைப் பற்றி கற்பிப்பதற்கும், பெரிய குழுக்களுக்கு எவ்வாறு தயார் செய்வது என்பது பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் என நாம் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் பயண மற்றும் சுற்றுலா சகோதரத்துவத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தினோம். அது மட்டுமன்றி, எமது நாட்டின் அதிசயங்களை அனுபவிக்கவும், அவை பற்றிய செய்தியை உலகிற்கு எடுத்துச்செல்லவும் பல்வேறு சர்வதேச பத்திரிகையாளர்களையும் மற்றும் ஊடகவியலாளர்களையும் நாம் அழைத்தோம்.

சந்தையில் உள்ள இடைவெளிகளை பகுப்பாய்வு செய்வதற்கும், நிலவும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக காத்திரமான தீர்வுகளை காண்பதற்கும் நாம் தனியார் துறை பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம். எதிர்காலத்தில், எமது தயாரிப்புகளை மேம்படுத்தவும், தரவுக்கான அணுகலை மேம்படுத்தவும் அதிக டிஜிட்டல் தொழில்நுட்பங்களையும் மற்றும் ப்ளாக் செயின் பயன்பாடுகளையும் பயன்படுத்த வேண்டும் என்பது எனது பார்வையாகும்.

சகல பங்குதாரர்களும் ஒரே தூரநோக்குடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றினால், ஆசியாவின் சிறந்த MICE ஸ்தலமாக இலங்கையை நிலைநிறுத்த முடியும் என நான் திடமாக நம்புகின்றேன்.

திசும் ஜயசூரிய
தலைவர்
இலங்கை மாநாட்டு பணியகம்

நிறைவேற்று சுருக்கம்

2022 ஆம் ஆண்டு பரவியிருந்த கோவிட்-19 தொற்றுநோய் குறிப்பிட்டவொரு அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் சுற்றுலா ஊக்குவிப்பு எதிர்பார்ப்புகளின் உச்ச கட்டத்தை அடைவதற்கு இந்த ஆண்டு ஒரு சவாலான ஆண்டாக விளங்கியது. இத்தகைய தடைகள் இருந்தபோதிலும் இமாப 2022 ஆம் ஆண்டிற்கான தனது திட்டமிட்டிருந்த பயிற்சி, சந்தைப்படுத்தல் ஆகிய தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.

சுற்றுலா துறையில் MICE தாக்கம், நிலையான தனித்துவமான விற்பனை முன்மொழிவுகள், ஹோட்டல்களுடனான கூட்டுறவை மேம்படுத்துதல் என்பன பற்றி சுற்றுலா தொழில் துறையினருக்கு கற்பிக்கும் முகமாக இமாப MICE சுற்றுலாப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் இமாப ஆராய்ச்சிப் பிரிவினால் கொழும்பு BMICH இல் MICE துறைக்கான ஒரு நாள் வேலையரங்காக ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், MICE சுற்றுலாவின் வளர்ச்சியில் தேசிய சுற்றுலா தொழிலாளர்களினது ஈடுபாட்டின் சாத்தியமான தாக்கத்தை எடுத்துரைத்தது. முதல் பயிற்சி திட்டத்திற்கு அதிக சந்தா செலுத்தியதால், இமாப மீண்டும் மீண்டும் கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தீர்மானித்தது. வட பிராந்திய ஹோட்டல் உரிமையாளர்களுக்கான வெற்றிகரமான முழு நாள் செயலமர்வு யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடத்தப்பட்டது.

SLCB, MICE விழிப்புணர்வு அமர்வு, 25 அமைச்சுக்களினதும் மற்றும் அரச நிறுவனங்களினதும் 130 அதிகாரிகளுடன் இமாப இன் பங்களிப்பு மற்றும் சர்வதேச நிகழ்வுகளுக்கான உதவித் திட்டம் என்பன பற்றி அதிகாரிகளுக்கு கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பணியகம் 250 எண்ணிக்கைக்கும் அதிகமான மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் இலங்கை மருத்துவ சங்கத்தின் (இமச) சர்வதேச காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றது.

இலங்கையை ஒரு MICE சுற்றுலா ஸ்தலமாக சந்தைப்படுத்த, இமாப பங்களாதேஷத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து பங்களாதேஷத்தின் டாக்கா நகரில் MICE சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. SLTPB உடன் இணைந்து இந்தியாவில் மூன்று வீதிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இந்திய MICE முகவர்கள், GACS கார்ப்பரேட்டு நிர்வாகிகள், பங்காளதேஷ் MICE முகவர்கள் மற்றும் ஊடகங்கள் என்பவற்றுடன் இணைந்து, இமாப வருடத்தில் மூன்று அறிமுக சுற்றுப் பயணங்களைத் திட்டமிட்டது. நிகழ்வுகளுக்கு, இமாப நிதி உதவியையும் மற்றும் உள்வகையான ஆதரவையும் வழங்கியது. மேலும் முக்கியமாக MICE சுற்றுலா சந்தைகளை இலக்காகக்கொண்டு இமாப சமூக ஊடக பிரச்சாரத்தைத் தொடர்ந்தது. இலங்கை மாநாட்டுப் பணியகம் 3220 ரொட்டரி பிரிவுகளுடன் இணைந்து முதலாவது ரொட்டரி சர்வதேச பெண் தலைவர் ஜெனிபர் ஜோன்ஸை இலங்கைக்கு வரவேற்றது. இலங்கைக்கு வருமாறு ரொட்டேரியன் மற்றும் ரொட்டேரியன் அல்லாத அனைவரையும் அழைக்கும் ஒரு வலுவான சாதகமான செய்தியை விடுக்கின்ற வீடியோ கிளிப்பை இமாப ஆல் எடுக்க முடிந்தது. உண்மையிலேயே, அவரின் அந்த வீடியோ கிளிப்பைப் பார்க்கின்ற போது, தென்னிந்தியாவிற்கான VNC ஸ்டீல் விநியோகஸ்தர்களின் நிர்வாகப் பங்குதாரர் திரு. பாஸ்கர் அவர்களின் வருடாந்த மாநாட்டை 550 பேக்ஸுடன் இலங்கையில் நடத்துவார் என தோன்றுகின்றது.

2022 ஆண்டில் அடைந்த சாதனைகள்

1. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி

1.1 MICE சுற்றுலா பயிற்சி

1.1.1 MICE சுற்றுலா துறைக்கான இமாப MICE பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

இமாப தனது வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளபடி இமாப இன் ஆராய்ச்சிப் பிரிவு, MICE சுற்றுலா துறைக்கான இமாப MICE பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை முழு நாள் வேலையரங்காக கொழும்பு BMICH இல் நடத்தியது.

உள்நாட்டு சுற்றுலா தொழில் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள், தொழில் கண்காட்சி நிகழ்ச்சித் திட்ட ஏற்பாட்டாளர்கள், பதிவு செய்யப்பட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் ஆகியோரை பிரதிநிதிப்படுத்தி 50 பங்குபற்றுநர்கள் இந்த முழு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு சுற்றுலா தொழிலில் MICE சுற்றுலா தாக்கம், நிலையான தனித்துவமான விற்பனைத் திட்டங்கள், ஹோட்டல் மற்றும் வருமான முகாமைத்தும் ஆகியவற்றுடன் மேம்பட்டு வரும் பங்காளித்துவம் என்பவற்றை தாமாகவே இற்றைப்படுத்திக்கொண்டனர். தேசிய சுற்றுலாத் தொழிலாளர்களின் ஈடுபாடு MICE சுற்றுலா அபிவிருத்தியில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது பற்றி ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் எடுத்துரைத்தது.

சொற்பொழிவாளர் குழுவில் முன்னாள் இராஜதந்திரி, முன்னாள் இமாப GM/இசுஅசுச இன் பதில் பணிப்பாளர் நாயகம் மற்றும் கல்வியாளரான கலாநிதி விபுல வணிகசேகர, தொழில்முனைவாளர், போதகர், வணிக உளவியல் ஆலோசகர் கலாநிதி Shafaath Amidon, Bconnected Pvt Ltd நிறுவனத்தின் MD, சிரேஷ்ட MICE தொழில்முனைவாளர், மனிதாபிமானி திருமதி குநடஉையை யுனாநவவல, Aitken Spence Travels நிறுவனத்தின் மாநாடுகள் கண்காட்சிகள் பொது முகாமையாளர் திரு சியான் அமீன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உள்ளக விற்பனை முகாமையாளர் திரு. அசேல அம்பேபிட்டிய ஆகியோர் அடங்குகின்றனர்.

பங்குபற்றுநர்கள் MICE நிகழ்வுகளை திறம்பட கையாள்வது தொடர்பான தகவல்களைப் பெற முடிந்ததால், கருத்தரங்கை பற்றி மிகவும் சாதகமான கருத்துக் குறிப்புக்களை முன்வைத்தனர். கருத்தரங்கு அமர்வு இறுதியில் சகல பங்குபற்றுநர்களுக்கும் பங்குபற்றல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



கருத்தரங்கு இறுதியில் உள்ள சகல பங்குபற்றுநர்களும்



நிகழ்வில் சொற்பொழிவாற்றும் சொற்பொழிவாளர்

1.1.2 MICE துறையின் மீள் கருத்தரங்குகான இமா MICE பயிற்சித் திட்டம்

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி நடத்தப்பட்ட MICE பயிற்சியின் பாகமாக ஒரு மீள் நிகழ்ச்சித் திட்டத்தை மீண்டும் ஏற்பாடு செய்ய முன்மொழியப்பட்டது. MICE துறையில் பங்குபற்றுவதற்கு அதிகம் ஆர்வம் இருந்ததாலும், ஸ்லைட்டுகள் இல்லாததால் பலர் இதில் கலந்துகொள்ளவில்லை.

உள்ளூர் தொழில்முறை மாநாட்டு ஏற்பாட்டாளர்கள், தொழில்முறை கண்காட்சி நிகழ்ச்சி திட்ட ஏற்பாட்டாளர்கள், தொழில்முறை நிகழ்ச்சித் திட்ட ஏற்பாட்டாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் என 50 பங்குபற்றுநர்கள் இந்த முழு நாள் நிகழ்ச்சி நிகழ்ச்சி திட்டத்தில் கலந்துகொள்ள தம்மை பதிவுசெய்துள்ளனர். சுற்றுலாத் துறையில் MICE இன் தாக்கம், நிலையான தனித்துவமான விற்பனை முன்மொழிவுகள், ஹோட்டல்களுடன் இருக்கின்ற கூட்டுறவை மேம்படுத்துதல், வருமான முகாமைத்துவம் என்பன பற்றி தம்மை இற்றைப் படுத்திக் கொண்டனர். ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், தேசிய சுற்றுலா தொழிலாளர்களின் ஈடுபாடு MICE சுற்றுலாத்துறையின் வளர்ச்சி எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றி கலந்துரையாடியது.

சொற்பொழிவாளர் குழுவில் கலாநிதி விபுல வணிகசேகர, கலாநிதி Shafaath Amidon, திருமதி பெலிசியா ஆதிஹெட்டி, திரு. சியான் அமீன் மற்றும் திரு. அசேல அம்பேபிட்டிய ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

கிடைத்த கருத்துகளின்படி, பெரும்பாலான பங்குபற்றுநர்கள் நிகழ்ச்சித் திட்டத்தை பற்றி மிகவும் சாதகமான கருத்துக் குறிப்புக்களை முன்வைத்தனர். கருத்தரங்கின் இறுதியில் பங்குபற்றுநர்கள் அனைவருக்கும் பங்குபற்றல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



சகல தொழில் பங்குபற்றுநர்களும்

1.2 வட பிராந்தியத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான பிராந்திய MICE பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

இமாப இன் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் இமாப MICE பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் வட பிராந்தியத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான முழு நாள் வேலையரங்காக யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடத்தப்பட்டது.

வட மாகாண ஹோட்டல்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 43 பங்குபற்றுநர்கள் இந்த முழு நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு வட மாகாணத்திற்கு வரக்கூடிய MICE சுற்றுலாவின் தாக்கம் பற்றி தம்மை இற்றைப்படுத்திக் கொண்டனர்.

சொற்பொழிவாளர் குழுவில் மூன்று சிரேஷ்ட MICE நிபுணர்கள் உள்ளடங்கியிருந்தனர். பங்குபற்றுநர்களுக்கு MICE சுற்றுலா அறிமுகம், மாநாட்டு முகாமைத்துவம், வருமான முகாமைத்துவம், நிகழ்வுகளுக்கான உணவு வழங்குதல், நிகழ்வுகளை சந்தைப்படுத்துதல் மற்றும் நிலையான தனித்துவமான விற்பனை முன்மொழிவுகள் மற்றும் தொழில்முனைவு முதலிய அம்சங்களை அறிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டனர் என்பதை அறிவதற்கு ஒரு குழு வேலை ஆய்வு கருத்தரங்கும் நடத்தப்பட்டது

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் "பிராந்திய நிகழ்வு வாய்ப்புகள் பற்றி ஆராய்தல்" என்ற தலைப்பில் குழு கலந்துரையாடலும் இடம்பெற்றது. "இந்த கலந்துரையாடலுக்கான குழு உறுப்பினர்களாக சுற்றுலா மற்றும் அனுசரணை மற்றும் சந்தைப்படுத்தல், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகவியல் பீடத்தின் பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பாளர், தலைவர் / சிரேஷ்ட விரிவுரையாளரான யாழ்-பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் கலாநிதி எஸ். ஜீவசுதன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.



கருத்தரங்கு இறுதியில் உள்ள சகல பங்குபற்றுநர்களும்




குழுக் கலந்துரையாடல்

கருத்தரங்கின் இறுதியில் பங்குபற்றுநர்கள் அனைவருக்கும் பங்குபற்றல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1.3 MICE சுற்றுலா புள்ளிவிபரங்கள்

இமாப நேரடியாக சுற்றுலா தொழில்துறையை தொடர்பு கொண்டு MICE தரவைப் பெற்றது. அவற்றிடமிருந்து பெற்ற அந்தத் தரவுகளின் சுருக்கம் பின்வருமாறு.

2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த 256 MICE சுற்றுலா நிகழ்வுகளில் ஒவ்வொரு வகையிலும் நடைபெற்ற MICE நிகழ்வுகளின் சதவீதத்தை கீழே காணப்படும் விளக்கப்படம் காட்டுகிறது.



1.4 இமாப MICE சுற்றுலா வாடிக்கையாளர் தரவுத்தளம்

வெளிநாட்டு MICE சுற்றுலா வாடிக்கையாளர்களின் தொடர்புகளைக் கொண்ட இமாப MICE சுற்றுலா வாடிக்கையாளர் தரவுத்தளத்திற்கு ஆண்டு முழுவதும் ஒன்லைனில் உபசரணை அளிக்கப்பட்டது. உள்ளூர் MICE சுற்றுலா தொழில் இந்த வாடிக்கையாளர் தொடர்புகளை அதன் இலக்குக்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் 2022

MICE சுற்றுலாவை மேம்படுத்துவதும், கூட்டங்கள், ஊக்குவிப்பு நிகழ்வுகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் /நிகழ்வுகள் என்பவற்றுக்கான உகந்த இடமாக இலங்கையை சுயவிவரப்படுத்துவதும் இமாப சந்தைப்படுத்தல் பிரிவின் முதன்மைப் பொறுப்பாகும்.

நாட்டின் சூழ்நிலை காரணமாக, 2022 ஆம் ஆண்டு சுற்றுலா தொழில்துறைக்கு சவாலான ஆண்டாக இருந்தது. அந்நிய செலாவணி பிரச்சினைகள் காரணமாக 2-வது மற்றும் 3-வது காலாண்டுகளுக்கு திட்டமிடப்பட்டிருந்த பெரும்பாலான சர்வதேச நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டன. அனைத்து சாதகமற்ற நிலைமைகள் இருந்தபோதிலும், இமாப திட்டமிட்ட செயற்பாடுகளில் 80% ஐ நிறைவு செய்தது.

2.1 MICE வீடியோக்கள் தயாரிப்பு

ரோட்டரி இன்டர்நேஷனல் (RI) இன் தலைவர் திருமதி ஜெனிபர் ஜோன்ஸ் அவர்களின் வருகை பற்றிய வீடியோ கிளிப்களை இமாப தயாரித்தது. மேலும், இமாப 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற இலங்கை சுற்றுலா வீதி கண்காட்சி நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பின் விளம்பர வீடியோ கிளிப்பை தயாரித்தது. சகல விளம்பர செயற்பாடுகளுக்கும் என இமாப ஏற்கனவே தயாரித்திருந்த உள்ளக வீடியோ கிளிப்களை பயன்படுத்தியது. இந்த வீடியோக்கள் இலங்கையில் MICE சுற்றுலா மற்றும் ஓய்வு சுற்றுலாத் துறையின் சுற்றுலா ஸ்தல நாட்டத்தை காண்பிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

2.2 விளம்பரப் பொருட்களின் தயாரிப்பும் அச்சீடும்

இமாப வெளிநாட்டு விளம்பர செயற்பாடுகளின் போது ஒரு பரிசாக வழங்குவதற்காக விளம்பரப் பொருட்களை கொள்வனவு செய்துள்ளது. உதாரணமாக: வண்ணமயமான மர யானைகள். இந்தியாவில் நடைபெற்ற இலங்கை சுற்றுலா விதிக் கண்காட்சிகள் மற்றும் பங்களாதேஷில் நடைபெற்ற MICE ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் போது ஊக்குவிக்கும் வகையில் மர யானைகள் வழங்கப்பட்டன. இமாப, சர்வதேச நிகழ்வுகளின் நிமித்தம் 1000 MICE சுற்றுலா விளம்பரப் ∴பிளையர்களை அச்சிட்டது. முக்கியமாக இது ஐக்கிய இராச்சியத்தில் 2022 நவம்பர் மாதம் 07-09 ஆம் திகதி வரை நடைபெற்ற உலகப் பயணச் சந்தையை மையமாகக் கொண்டது. மேலும், இமாப உள்ளூர் MICE தொழில்துறை பங்குதாரர்களினால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு உள்நாட்டில் விளம்பரப் பொருட்களை கொள்வனவு செய்தது. உதாரணமாக: ஊக்கக் குழுக்களுக்கும் மற்றும் மாநாடுகளுக்கும்.

2.3 இணைய மைய விளம்பரங்கள் / டிஜிட்டல் விளம்பரங்கள் / SEO வேலை

இமாப இணையத்தளம் - இமாப இன் www.meetinsrilanka.com இணையத்தளம் ஸ்ரீ லாங்கா ரெலிகம் நிறுவனத்தின் கூட்டொத்துழைப்பில் பேணப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது.

சமூக ஊடக பிரச்சாரம் -

கோவிட் தொற்றுநோய் காலத்திலும், இமாப டிஜிட்டல் ஊடகத்தில் தனது பிரச்சாரத்தை தொடர்ந்தது. MICE சுற்றுலா தொழிற்துறையைப் பற்றி உலகிற்கு தெரியப்படுத்துவதிலும் இலங்கையின் அண்மைகால அபிவிருத்தியை மேம்படுத்துவதிலும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. இந்த பிரச்சாரத்தின் போது இலக்குக்கொள்ளப்பட்ட முக்கிய சமூக ஊடக தளங்கள் Facebook, LinkedIn, Twitter, Instagram, YouTube என்பனவாகும். இமாப 'MeetInSriLanka' என்ற கோஷத்தின் கீழ் சமூக ஊடக பிரச்சாரத்தைத் தொடர்ந்தது.

இலங்கை சுற்றுலாத்துறையின் முதன்மையான சந்தைப்படுத்தல் பிரிவாக, இமாப இன் இலக்குக்கொள்ளப்பட்டுள்ள சுற்றுலா சந்தைகளுக்கு டிஜிட்டல் முறையில் தனித்துவமான மதிப்பு முன்மொழிவுகளை (USPs) பரப்பியது. இந்த பிரச்சாரம் MICE சுற்றுலாவுக்கும் மற்றும் ஓய்வு சுற்றுலாவுக்கும் சிறந்த இடமாக சர்வதேச அளவில் போட்டித்திறனையும் மற்றும் கவர்ச்சியையும் ஊக்குவித்தது. இலங்கையின் இலக்கு சுருக்கம், நம்பகத்தன்மை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைத் தெரிவிப்பதன் மூலம் "MeetInSriLanka" என்ற கோஷத்தை வெற்றிகரமாக மீண்டும் நிலைநிறுத்த இந்த பிரச்சாரத்தின் மூலம் முடிந்தது. தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய்க்கு பிந்தைய காலங்களில், MICE சுற்றுலா மற்றும் இலங்கையை சுற்றுலாவில் நீடிக்க வைக்கும் நோக்கத்துடன் இமாப டிஜிட்டல் விளம்பர பிரச்சாரத்தை வெற்றிகரமாக முன்னெடுத்தது.

இமாப சமூக ஊடக பிரச்சாரத்தின் முக்கிய புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



2.4 விளம்பரப்படுத்துதல் - தேசிய மற்றும் சர்வதேச

சர்வதேச ரீதியில் விளம்பரப்படுத்துதல்

நாட்டின் சாதகமற்ற சூழ்நிலை, இலங்கை தொடர்பான பயண ஆலோசனைகள் மற்றும் அந்நிய செலாவணிகள் பிரச்சினைகள் ஆகியவற்றினால் இமாப சர்வதேச சஞ்சிகைகளை தளங்களில் விளம்பரம் செய்யவில்லை. எனினும் 2022 ஆம் ஆண்டு, சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சிக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால மூலோபாயமாக இலங்கை சுற்றுலா இந்தியாவை மையமாகக் கொண்டு வினம்பரப்படுத்தப்பட்டது. இமாப FOC அடிப்படையில் இந்தியாவின் அவுட்பவுண்ட் (IO) சுற்றுலா பிரிவுடன் இணைந்து ஆண்டு பிற்பகுதியில் சில கட்டுரைகளை வெளியிட்டது.

தேசிய ரீதியில் விளம்பரப்படுத்துதல்

"தி டைரக்டர்" என்பது உலகளவில் பரந்திருக்கின்ற இலங்கை இயக்குநர்கள் நிறுவனத்தால் (SLID) வெளியிடப்பட்ட முதன்மையான காலாண்டு செய்திமடலாகும். கூட்டுறவு ஆளுமை, உலகில் சமீபத்திய செய்திகள் மற்றும் போக்குகள் என்பன இந்த இதழில் அடங்குகின்றன. இது 150,000 நிறுவன இயக்குநர்கள், தொழில்முறை மற்றும் உயர் நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோரை சென்றடைகின்றது. இமாப MICE சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கத்துடன் "The Director" இதழில் மூன்று கட்டுரைகளை விளம்பரப்படுத்தியது.

2.5 வெளிநாட்டு கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் / விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களில் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்றல்

இமாப செயல் திட்டத்தில் IMEX - Frankfurt, BLTM- இந்தியா, IBTM - பார்சிலோனா, ITB ஆசியா - சிங்கப்பூர் ஆகிய நான்கு கண்காட்சிகள் நடத்தப்பட்டன. தேசம் எதிர்கொள்ளும் அந்நிய செலாவணி பிரச்சினை காரணமாக, சர்வதேச கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டன. எனினும் IMEX, ITB ஆசியா மற்றும் BLTM - இந்தியா இரத்து செய்யப்பட்ட நேரத்தில், செயல் திட்டத்தின் 80மூ செயற்பாடுகள் நிறைவடைந்தன.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இமாப இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தால் (SLTPB) 2022 நவம்பர் மாதம் 7 முதல் 9 ஆம் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரில் நடத்தப்பட்ட நுஒஊநடு வேர்ல்ட் ட்ரவல் மார்ட்டில் (WTM) இலங்கை பெவிலியனில் ஒரு விளம்பர கொட்டகை ஏற்பாடு செய்யப்பட்டது. இமாப, இலங்கை சுற்றுலாத்துறையின் தற்போதைய சந்தைப்படுத்தல் மூலோபாயத்திற்கு இணங்க சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சரின் இலக்கை மேம்படுத்துவதற்கு SLTPB உடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும். சர்வதேச ஊடகங்களிலும், ஐரோப்பிய சுற்றுலா வணிகசார் நிகழ்ச்சித் திட்டங்களிலும் உரையாற்றினார். மேலும் ஓய்வு மற்றும் MICE சுற்றுலா பயணிகளுக்கு இலங்கையின் கதவு எப்பொழுதும் திறந்திருக்கும் என்ற செய்தியை தெரிவித்ததால் இந்த நிகழ்வு வெற்றிகரமாக அமைந்தது. WTM இல் பங்கேற்பதன் மூலம் இமாப இற்கு இலக்கு திறன்களையும் மற்றும் குறிப்பாக ஐரோப்பிய MICE பயணிகளை வரவேற்கும் வசதிகளையும் மேம்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்தது.

இமாப, வங்காளதேஷத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் திகதி பங்களாதேஷத்தில் உள்ள டாக்கா நகரில் MICE சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 20 உள்ளூர் MICE சுற்றுலா தொழில்துறை பங்குபற்றுநர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 53 பங்களாதேஷ் பயண முகவர்களும் 14 ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். முகாமைத்துவ சபையின் பணிப்புரையின் பிரகாரம், இமாப இலங்கை உயர்ஸ்தானிகராலய வளாகத்தில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.





SRI LANKA
CONVENTION BUREAU

கௌரவ சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இலங்கை சுற்றுலாத்துறை 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் புது தில்லி, மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் நடைபெற்ற இந்தியாவில் மூன்று வீதிக் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடத்தியது. இந்த வீதிக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB) மற்றும் இலங்கை மாநாட்டு பணியகம் (இமாப) ஆகியன செலவு பகிர்வு அடிப்படையில் ஏற்பாடு செய்தன.

B2B கூட்டங்களில் உள்ளூர் பயண வணிகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 50 இற்கும் அதிகமான பங்குபற்றுநர்களை உள்ளடக்கி மூன்று நகரங்களில் 600 இற்கும் அதிகமான இந்திய பயண வணிகசார் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்த வீதிக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் 50 இற்கும் அதிகமான இந்திய ஊடகங்களும் கலந்து கொண்டன. இந்திய பயண வணிகத்தில் பயண முகவர்கள், MICE சுற்றுலா முகவர்கள், கார்ப்பரேட்டுகள் மற்றும் சங்கங்கள் என்பனவும் இந்தியாவில் நடைபெற்ற வீதிக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டனர். முன்னணி விமான நிறுவனங்களான இண்டிகோ, எயார் இந்தியா, அலையன்ஸ் எயார் மற்றும் ஸ்பைஸ் ஜெட், சிஎன்என், என்டிடிவி, டிவி 9 மற்றும் தெலுங்கு திரைப்பட தயாரிப்பாளர்கள், மாஸ்டர்கார்டுக்கள் ஆகியவற்றுடனான சந்திப்புகள் மற்றும் பயண முகவர்கள், அசோசியேஷன் பார்வையாளர் சந்திப்புகள் போன்ற பல்வேறு சுற்றுலா மீடியா தரப்புகளுடன் சந்திப்புகள் நடத்தப்பட்டன. இந்தியா (TAAI), இந்தியா அசோசியேஷன் பயண இயக்குநர்கள் (IATO) இந்திய வெளிவாரி பயண இயக்குநர் சங்கம் (OTOAI), இந்தியன் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர், புத்த பயண இயக்குநர்கள், பயண முகவர்கள், ∴பெடரேஷன் ஒ∴ப் இந்தியா மற்றும் இந்திய தேசிய புவியியல் ட்ரவலர் நிறுவனத் தலைமை ஆசிரியரும் இதன் போது கலந்து கொண்டார்.

இலங்கை சுற்றுலாத்துறைக்கான தூதுவர் திரு. சனத் ஜயசூரிய அவர்கள் மும்பையில் நடைபெற்ற வீதிக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டார்கள். இந்தியப் பயணிகளை வரவேற்க இலங்கை தயாராக இருப்பது பற்றி இலங்கை சுற்றுலா வீதிக் கண்காட்சிகள் மெகா இந்திய பயண சந்தைக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின. வீதிக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு வரவிருக்கும் பயணிகளின் கருத்தை வடிவமைக்கும் அதே நேரம் இறுதியில் இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டுவதாகவும் அமைந்தன.









2.6 MICE அறிமுக சுற்றுலாக்கள்

MICE அறிமுக சுற்றுப்பயணங்கள், MICE சுற்றுலாவைக் காட்சிப்படுத்துவதற்கும், சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கான இலக்கை மேம்படுத்துவதற்கு முதல்-நிலைத் தகவல்களையும் மற்றும் வெளிப்பாடுகளையும் வழங்குவதற்கும் ஒரு முக்கியமான கருவியாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கை, MICE சுற்றுலாவிற்கு பாதுகாப்பான இடமாகவும், சுற்றுலா அனுபவங்களுக்கு கவர்ச்சியான இடமாகவும் உள்ளது என்ற செய்தியை பங்குபற்றுநர்களுக்கு தெரிவிப்பதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் MICE சுற்றுலா மற்றும் ஓய்வு சுற்றுலா ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

குறித்த ஆண்டு காலத்தில், இமாப மூன்று அறிமுகப் பயணங்களை ஏற்பாடு செய்தது. முதல் நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் அறிமுக சுற்றுப்பயணத்திற்கு 8 இந்திய MICE முகவர்கள் அழைக்கப்பட்டனர். கார்ப்பரேட்டு சேவைகளின் சர்வதேச சங்கத்தின் (GACS) 06-வது கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு என இரண்டாவது அறிமுகப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார், 6000 உறுப்பினர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளை உள்ளடக்கிய GACS இல் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் 07 MICE முகவர்கள் மற்றும் ஊடகங்கள் குழுவிற்காக 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாத்தில் மூன்றாவது அறிமுகப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

உள்ளூர் MICE தொழில்துறைக்கும் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையிலான B2B அமர்வுகள் இமாப இன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த அமர்வு இலங்கையை MICE சுற்றுலா இலக்கை நோக்கி மேலும் மேம்படுத்தும் வகையில் சர்வதேச MICE முகவர்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை இலங்கை MICE தொழிற்துறை உறுப்பினர்களுக்கு வழங்கியது.









SRI LANKA
CONVENTION BUREAU

2.7 இமாப MICE பயணிகள் உதவித் திட்டம் மற்றும் நிகழ்வு ஆதரவு


இமாப MICE பயணிகளுக்கான உதவித் திட்டம் இலங்கைக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச ஆஜஊநு நிகழ்வுகளை ஈர்க்க தொழில்துறைக்கு உதவும். இந்த்திட்டத்தின் மின் ∴ப்ளையர் இமாப இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. குறித்த ஆண்டு காலப் பகுதியில், பின்வரும் நிகழ்வுகளுக்கு இமாப நிதி உதவியையும் மற்றும் உள்வகையான ஆதரவையும் வழங்கியது.

- 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28-30 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெற்ற இலங்கை - தயாரிப்பு Buy Sri Lanka
- 2022 ஆம் ஆண்டு 18-20 ஆம் திகதி நடைபெற்ற டுயமெயியம கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்திய கண்காட்சி ஆய்வு
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெற்ற தொழில் முறை சங்கங்கள் அமைப்பின் (OPA) 25 - வது வருடாந்த மாநாடு
- 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற உபசரணை மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் பற்றிய 9-வது சர்வதேச மாநாடு
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெற்ற டாவிஸ் கிண்ண டெனிஸ் சுற்றுப் போட்டி
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை Beyond Boarders ஆல் ஏற்பாடு செய்யப்பட்டு ஹைதராபாத் நகரில் நடத்தப்பட்ட ஊக்குவிப்பு குழு நிகழ்ச்சித் திட்டம்
- அபுதாபி அறிமுக சுற்றுலா குழு நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற எயார்லைன்ஸ் பிரதிநிதிகள் இலங்கை சங்கத்தின் 29-வது பொதுக் கூட்டம் (SLAAR)
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை ரொட்டரி இந்திய நட்புநேய பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற்ற பொதுநலவாய செஸ் சம்பியன் போட்டி
- திசம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெற்ற INPALMS இன் 14-வது சர்வதேச காங்கிரஸ் மாநாடு (INPALMS 2022)
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு இந்தியன்ஸால் ஏற்பாடு செய்த Divali-ball - 2022
- 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்திய MICE சுற்றுலா குழு அல்பாக லாவெல் இந்தியா
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இந்திய Infotech தனியார் நிறுவன ஊக்குவிப்பு குழு நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற ரொட்டரி சர்வதேச புன்னிய விருது கொழும்பு - சர்வதேச ரொட்டரி சங்க தலைவரின் விஜயம் - 2022

2.8 ஏனைய சந்தைப்படுத்தல் செயற்பாடுகள்

- **சுற்றுலா ETA முறைமையினுள் MICE சுற்றுலாவை உள்ளீர்த்தல்**

இமாப, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து MICE சுற்றுலாவை உள்ளீர்க்க தற்போதுள்ள ETA விண்ணப்பப் படிவத்தில் மாற்றங்களை செய்ய வேண்டியதன் அவசியத்தை பரிந்துரைத்தது. இந்த மாற்றங்கள் இலங்கைக்கு MICE சுற்றுலாப் பயணிகள் வருகை தொடர்பான புள்ளிவிபரங்களைத் தெளிவாக சித்தரிக்கின்றன. இதன் விளைவாக, சுற்றுலா பயணிகள் வருகை விடய நோக்கத்தின் கீழ் துணைப் பிரிவுகளை உள்ளீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் இலங்கையில் MICE சுற்றுலா தொடர்பான புள்ளிவிவரங்களையும் பதிவுகளையும் மேம்படுத்த வழிவகுத்தன.



- **FIFA FAN வலயம் - நீர்கொழும்பு**

2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் திசம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை கட்டார் நகரில் நடைபெறும் கால்பந்து உலகக் கிண்ணத்துடன் இணைந்து FIFA ரசிகர் மண்டலத்தை நீர்கொழும்பு கடற்கரைப் பூங்காவில் இலங்கை சுற்றுலா அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. நீர்கொழும்பில் உள்ள FIFA ரசிகர் மண்டலம் வெற்றிகரமாக நேரடி போட்டி காட்சிகளையும், பொழுதுபோக்கு நிகழ்வுகளையும், உணவு வகைகளையும் மற்றும் உணவுக்கு பெருமளவான மக்களையும் மற்றும் மதுபானக் கடைகளையும் ஈர்த்தது. இமாப இந்த குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைப்பதற்காக SLTPB இற்கு கருனை ஆதரவை வழங்கியது.

- **ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை MICE EXPO செயற்பாடுகள் ஆரம்பம் - 2023**

இலங்கை MICE EXPO 2023, 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 முதல் 15 வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. MICE EXPO 2023 இலங்கையின் தொழில்முறை மாநாடு, கண்காட்சி மற்றும் நிகழ்வு அமைப்பாளர்களின் (SLAPCEO) ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிறுவனத்திற்குத் தேவையான நேரத்தைக் கருத்தில் கொண்டு திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. முக்கிய சர்வதேச MICE சந்தைகளில் இருந்து உபசரணை அளிக்கப்பட்ட 100-200 சுற்றுலா வாடிக்கையாளர்களை SLMICE எக்ஸ்போ 2023 இற்கு ஈர்க்க இமாப உத்தேசித்துள்ளது.

3. சங்கங்களுடனான இணைப்பு

MICE சுற்றுலா விழிப்புணர்வு கருத்தரங்கு

பல அரசாங்க நிறுவனங்களுக்கு இமாப பற்றி தெரியாது என்பதால், MICE விழிப்புணர்வு கருத்தரங்கு, இமாப இன் பங்களிப்பு மற்றும் சர்வதேச நிகழ்வுகளுக்கான உதவித் திட்டம் பற்றி அதிகாரிகளுக்குக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் நடைபெறும் பல மாநாடுகளில் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொள்வதால், மாநாடுகளின் நிமித்தம் ஏலமிடுவதற்கும் அவற்றை இலங்கைக்கு கொண்டு வருவதற்கும் அரசாங்க நிறுவனம் அதிக திறன் கொண்டது. இதேபோன்ற வணிக நிகழ்வுகளுக்கான இடமாக இலங்கையை மேம்படுத்துவதற்கு அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரி இமாப MICE விழிப்புணர்வு கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. மேலும் பணியகம் அமைப்பாளர்களுடன் உரையாடலை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டது. மேலும் எமது நாடு MICE திறன்களைக் காண்பிப்பதற்கான அறிமுக சுற்றுப்பயணங்களில் இலங்கைக்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறும் கேட்டுக் கொண்டது. இந்த கருத்தரங்கு 2022 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்றது. 25 அமைச்சுக்களினதும் மற்றும் அரச நிறுவனங்களினதும் 130 இற்கும் அதிகமான அதிகாரிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.



சுற்றுலா அமைச்சின் செயலாளர்
சூலானந்த பெரேரா அவர்கள்
அமர்வின் தொடக்க உரையை ஆற்றும்போது.



அரச நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம்



மத்திய வங்கி ஆளுநர் அமர்வின் முக்கிய உரையை ஆற்றும்போது

இலங்கை மருத்துவ சங்கம் (SLMA) -

BMICH இல், 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி வரை நடைபெற்ற இலங்கை மருத்துவ சங்க (SLMA) சர்வதேச காங்கிரஸ் மாநாட்டில் பணியகம் பங்குபற்றியது. "உலக சுகாதாரம் மற்றும் பூகோள சுகாதாரப் பாதுகாப்பு" என்ற கருப்பொருளின் கீழ் குறித்த இந்த காங்கிரஸ் மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாடு 250 இற்கும் அதிகமான மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இமாப குழு, அனைத்து 03 நாட்களும் தகவல் கருமபீடித்தை நிர்வகித்தது அதன் ஊடாக பல மருத்துவ கல்லூரிகளினதும் மற்றும் சங்கங்களினதும் பிரதிநிதிகளை சந்தித்தது. இந்த 03 நாள் மாநாட்டில், இமாப மருத்துவ மாநாடுகளை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு கிடைக்கக் கூடிய கேள்விமனு மற்றும் நிகழ்வுகள் ஆதரவு நிமித்தம் கல்லூரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இமாப பின்வரும் சங்கங்களுடன் இணைந்து தொழிற்படும். மேலும் அடுத்த ஆண்டில் இரண்டு மாநாடுகளையும் நடத்தும்.

i. இலங்கை உட்சுரப்பியல் நிபுணர்கள் கல்லூரி SLENDO 2023 - நாளமில்லா மற்றும் நீரிழிவு மாநாடு


ii. இலங்கை தோல் மருத்துவ கல்லூரி - தோல் மருத்துவத்தில் தெற்காசிய பிராந்திய மாநாடு 2023



இலங்கை அபிவிருத்தியின் பணிப்பாளர் நாயகத்தின் உரையாடலின் போது

❖ **குழந்தை நல மருத்துவர்களின் 19-வது ஆசிய பசுபிக் காங்கிரஸ் மாநாடு (APCP 2026) -**

இமாப குழந்தை நல மருத்துவர்கள் கல்லூரியுடன் இணைந்து 2024 ஆம் ஆண்டு ஆசிய பசுபிக் குழந்தை மருத்துவ காங்கிரஸ் மாநாட்டை நடத்துவதற்கான கேள்விமனுவை சமர்ப்பித்தது. இருப்பினும் அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக 2026 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டது.



❖ **2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அழகியல் பல் மருத்துவ 17-வது இரு ஆண்டு மாநாடு**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மாநாட்டை நடத்துவதற்காக இலங்கை அழகியல் பல் மருத்துவ சங்கத்துடன் (SLAAD) பணியகம் செயற்படுகின்றது.

4. மனித வளம் மற்றும் நிருவாகம்

இமாப பதவியணி பற்றிய விபரம்

1	திருமதி கிமாலி பெர்னாந்து	தலைவர் (2022 மே வரை)
2	திரு. திசும் ஜயசூரிய	தலைவர் (2022 யூன் முதல்)
3	திரு. கிரிஷாந்த பெர்னாந்து	பொது முகாமையாளர்
4	திருமதி. அச்சினி தண்துன்னகே	சிரேஷ்ட முகாமையாளர்
5	செல்வி. மல்காந்தி வெலிகல	முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
6	செல்வி. குமுது ஹென்னெதிகே	முகாமையாளர் - ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி
7	திருமதி. ரஞ்சிகா பெரேரா	உதவி முகாமையாளர் - கணக்குகள் மற்றும் நிருவாகம்
8	திருமதி. பியூமி பீரிஸ்	உதவி முகாமையாளர் - ஆராய்ச்சி, அபிவிருத்தி, வர்த்தக தரநிலைகள் மற்றும் சங்க கூட்டங்கள் (2022.09.30 ஆம் திகதி ராஜினாமா செய்தார்)
9	திருமதி. ஹேமாலி மகாமுதலி	உதவி முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு (2022.09.08 ஆம் திகதி ராஜினாமா செய்தார்)
10	திரு. கே. ஜி. ஜனித் பாத்தியா	உதவி முகாமையாளர் - கூட்டுத்தாபனங்கள், ஊக்குவிப்பு மற்றும் நிகழ்வுகள் (2022.11.30 ஆம் திகதி ராஜினாமா செய்தார்)
11	திருமதி லக்ஷிகா பண்டார	கனிஷ்ட முகாமையாளர் - மவ மற்றும் சபை விவகாரங்கள்
12	திருமதி. தினுஷ்கா பொன்சேக்கா	முகாமைத்துவ உதவியாளர் - பொது முகாமையாளருக்கான செயலாளர்
13	செல்வி தில்ஷானி தாபரே	முகாமைத்துவ உதவியாளர் - கணக்குகள் மற்றும் நிருவாகம்
14	திருமதி சமுர்த்தி வாஸ்	முகாமைத்துவ உதவியாளர் - கொள்வனவு
15	திரு. பிரபோத விஜேசூரிய	அலுவலக உதவியாள்
16	திரு. சுபுன் கௌசல்ய	சாரதி

5. உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைவதற்காக நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் தரநியமங்கள் மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகள் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றது.

இமாப இன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நான்கு உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை வெளியிட்டது. 2022 ஆம் ஆண்டிற்கு நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

SRI LANKA
CONVENTION BUREAU

6. நிதிக் கூற்றுக்கள் 2022

இலங்கை மாநாட்டு பணியகம்

2022.12.31 ஆம் திகதிக்கு

நிதிச்செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2022 (ரூபா)	2021 (ரூபா)
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசும் காசிற்குச் சமமானவைகளும்	16	78,802,590	45,693,043
பெறவேண்டியவைகள்	17	101,593,677	38,994,799
முற்கொடுப்பனவுகள்	18	55,375	204,286
இருப்புகள்	19	2,482,802	3,706,055
வைப்புகள்	20	82,000	82,000
குறுங்கால நிலையான வைப்புகள்	21	169,460,271	157,146,563
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**352,476,715**	**245,826,746**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதன, பொறி, உபகரணம்	22	3,143,642	3,547,417
அருவகச் சொத்துக்கள்	22	63,000	72,000
நீண்டகால முதலீடுகள்	23	132,000,000	132,000,000
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**135,206,642**	**135,619,417**
மொத்த சொத்துக்கள்		**487,683,357**	**381,446,163**
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்கள்	24	3,794,046	2,282,074
பாதகமான வங்கி மீதி		11,466,688	1,861,137
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**15,260,734**	**4,143,211**
நீண்டகால பொறுப்புகள்			
ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு		4,106,015	4,368,780
மொத்த நீண்டகால பொறுப்புகள்			
மொத்த பொறுப்புகள்		**19,366,749**	**8,511,991**
தேறிய சொத்துக்கள்		468,316,608	372,934,172
தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம்			
மூலதனப் பங்களிப்பு		10,457,784	10,457,784
திரண்ட மிகை/(பற்றாக்குறை)	25	457,858,824	362,476,388
மொத்த தேறிய சொத்துக்கள்;/ உரிமை மூலதனம்		**468,316,608**	**372,934,172**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டின் படியும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உதவி நிதி முகாமையாளர் சான்றுறுதிப்படுத்துகின்றார்.

.....

ரஞ்சிக பெரேரா
ஊதவி முகாமையாளர் - கணக்கு

.....

சமித்தா பிரசாதினி
சபை அங்கத்தவர்
இலங்கை மாநாட்டு பணியகம்

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். இந்நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 28 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

.....

கிரிசாந்த பெர்னான்டோ
பொது முகாமையாளர்
இலங்கை மாநாட்டு பணியகம்

.....

திசும் ஜயசூரிய
தலைவர்
இலங்கை மாநாட்டு பணியகம்

இலங்கை மாநாட்டு பணியகம்

2022 ஆம் ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2022 உள்ளபடியானது ரூபா	2022 வரவு செலவுத் திட்டம் ரூபா	2021 உள்ளபடியானது ரூபா	2021 வரவு செலவுத் திட்டம் ரூபா
வருமானம்					
தரை இறங்கும் கட்டணம்		103,914,422	48,935,621	19,359,129	11,763,185
